**சபரகமுவ மாகாண சபை - 2018**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சபரகமுவ மாகாண சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பின்கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 23(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 23(2) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூலை 26 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபரகமுவ மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சபரகமுவ மாகாண சபையின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வின் பிரகாரம் கணக்காய்வு என்னால் செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(இ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் படி மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணக்குகின்றது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் கண்டறிப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,434,085,495 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,667,260,162 தொகை என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் ரூபா 1,766,825,333 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அனைத்து நடைமுறை அல்லாத சொத்துக்களும் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். | சிகாஸ் வேலைத் திட்டத்தில் உட்படுத்தியுள்ள சொத்துக்கள் மாத்திரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

### 1.6.2 இணக்கமின்மை

#### 1.6.2.1 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 172(8),(9) | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2006 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 02 மிகை விதிப்புச் சான்றிதழ்கள் தொடர்பான கூட்டுத் தொகை ரூபா 1,272,321 தொகை அறவீடு செய்வதற்காக மீளாய் வாண்டின் இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பிரதேச சபை சட்ட ஏற்பாடு களின் படி செயற்பட வேண்டும். | மாவனல்ல பிரதேச சபைக்குச் சொந்த மான ரூபா 1,250,000 பெறுமதியான மிகை விதிப்புக்காக மிகை விதிப்பாளர் ஒருவர் மேன்முறையீடு செய்து ள்ளார். கேகாலை பிரதேச சபைக்கு உரிய ரூபா 22,321 பெறுமதியான மிகை விதிப்பு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் அந்த வழக்கை தாக்கல் செய்வதற்காக நடவடிக்கை தயாரிக் கப்பட்டு வருகின்றது. |

(ஆ) சபரகமுவ மாகாண சபையின் நிதி விதிக்கோவை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | மா.நி.வி.54 | மாகாண சபையின் 03 அமைச்சுக்கள் மற்றும் 02 நிறுவனங்களில் ஏற்பட்டிருந்த 48 விபத்துக்கள் தொடர்பாக ரூபா 10,505,218 இற்கான நட்டம் தொடர்பாக நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக விரைவாக பரிசோதனை மேற் கொண்டு குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மா.நி.வி.117.1 | 05 வைத்தியசாலைகள் தொடர்பாக சேகரிக்கப் பட்ட மாதாந்த உணவக வருமானம் மாகாண சபை வருமானத்திற்கு செலவு வைப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் வைத்தியசாலைகளில் தனியான கணக்கு ஒன்றில் வைப்புச் செய்யப்பட்டு இருந்த துடன், மீளாய்வாண்டு இறுதி அளவில் அந்தக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,729,222 தொகையாக இருந்தது. எம்பிலிபிடிய தள வைத்தியசாலை யினால் அந்த வருமானத்தில் இருந்து அங்கீகாரம் இன்றி செலவு செய்யப்பட்டிருந்தது. | நிதி விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உணவகங்களில் இருந்து கிடைக்கும் வாடகை வருமானம் ஒவ்வொரு வைத்தியசாலையின் கீழ் காணப்படும் உணவக வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதுடன், அந்த நிதியத்தின் பணம் வைத்தியசாலை அபிவிருத்தி அலுவல் களுக்கும், அவசர மற்றும் அத்தியவசிய மான பண்டங்கள் கொள்வனவு செய்வதற்கும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி.571 | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 நிறுவனங்களுக்கு உரிய ரூபா 64,929,146 தொகைக்கான 184 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சில வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட துடன் மீதியை விரைவில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 2007 மே 11 திகதிய இலக்கம் 09/2007, 2017 ஒக்தோபர் 13 திகதிய இலக்கம் 27/2017 மற்றும் 2018 பெப்ரவரி 20 திகதிய இலக்கம் 03/2018 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 2014 மே 02 திகதி முதல் 2018 ஒக்தோபர் 02 திகதி வரை மாகாண சபையின் உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு கூட்டுத் தொகை ரூபா 652,662 இற்கான படிகள், நிலுவைச் சம்பளம் செலுத்தப்பட்டி ருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மேற் கொள்ளப்பட்ட கொடுப்பனவு கள் திருப்பி அறவிடப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர் என சேவையாற்றிய நபருக்கு குறிப்பிட்ட பணத்தை அரசாங்கத்திற்கு செலவு வைக்குமாறு அறிவித்துள்ளேன். |
| (உ) | 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 3.2 | சமூக அடிப்படை அமைப்புக்கள் அல்லாத சங்கம் ஒன்றிற்கு மாகாண வீதிகள் அமைச்சின் ரூபா 3,795,738 தொகைக்கான 02 நிர்மாண வேலைகளை வழங்குவதற்கு பலங்கொடை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் கண்டறிந்து பதில் அனுப்புவேன். |

## 2. வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணி ஆணையாளர் திணைக்களத்தினால் அறவிடப் பட வேண்டிய காணி குத்தகை வருமானம் ரூபா 13,442,234 தொகையாக இருந்தது. | நிதி விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | காணி குத்தகை சேகரித்தல் தொடர்பாக கணக்குப் பதிவீடு பண அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் அட்டுறு அடிப்படையில் வருமானம் சேகரித்தல் மற்றும் கணக்கீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டு ள்ளது. அப்போது நிலுவை வருமானம் சேகரித்தல் தொடர்பாக அறிவிப்பதற்கு முடியுமென எதிர்பார்க்கின்றேன். |

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின் போது மாகாண சபை நிதியத்தில் ரூபா 1,575,207,635 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 123,644,491 தொகையாக இருந்தது.

## 4. நியதிச் சட்டக் கணக்குகள், நிதியங்கள் மற்றும் வாணிப முற்பணக் கணக்குகள்

### 4.1 நியதிச் சட்டக் கணக்குகள்/ நிதியக் கணக்கு

### (அ) சபரகமுவ வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளாமல் பல வருட காலம் முதல் அங்கீகாரம் இன்றி ஓடுகின்ற பஸ் வண்டிகள் தொடர்பான தகவல்களை கண்டறிவதில் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தோல்வி அடைந்துள்ளது. | ஓட்ட அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் ஓடும் பஸ்கள் தொடர்பாக தகவல்கள் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுத்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மாதாந்த தண்டப் பண அறவிடுவதில் போக்கு ஒன்று காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2016 மற்றும் 2017 ஆண்டு களின் போது நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு முரணாக 03 சந்தர்ப்பங்களில் கூட்டுத் தொகை ரூபா 2,312,250 செலுத்தப்பட்டிருந்தது. | குறிக்கோள்களுக்கு முரணாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது | ஏற்றுக்கொள்கின்றேன். முன்நிகழ்வு ஒன்றாக கொடுப்பனவு செய்யப்பட்டது. |
| (iii) | இரத்தினபுரி – எம்பிலிபிடிய பாதைக்கான அனுமதிப் பத்திரம் ஒன்று பெறுவதற்காக நபர் ஒருவருக்கு ரூபா 2,000,000 தொகைக்கான டென்டர் ஒன்று வழங்கப் பட்டிருந்த போதிலும், இந்த பாதைக்காக பாதை அனுமதிப் பத்திரம் ஒன்று இருப்பதாக வேறு நபர் ஒருவர் கோரிக்கைப் பத்திரம் ஒன்று சமர்ப்பித்திருந்தமையால் டென்டர் மூலம் வழங்கப் பட்டிருந்த அனுமதிப் பத்திரம் தொடர்பாக பணம் பெறப்பட்டிருக்கவில்லை. | வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், நிச்சயிக்கப்பட்ட நடைமுறை ஒன்றின் அடிப்படையில் பாதை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கோரிக்கைப் பத்திரம் தொடர்பான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (iv) | அதிகார சபையினால் 2015 ஆண்டில் ரூபா 3,441,110 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்து பாதுகாப்பு கமரா முறைமை 2019 மே 06 திகதி அளவில் செயற்படாது காணப்பட்டது. | குறிப்பிட்ட உபகரணங்களை பயன்படுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(ஆ) இபரெனிகம தேமா பூந்தோட்ட அதிகார சபை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 03 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு மற்றும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி சட்டத்தின் பிரிவுகள் 10 மற்றும் 16 இன் பிரகாரம் குறிப்பிட்டுள்ளவாறு பங்களிப்புத் தொகைகள் செலுத்தி இருக்காமையால் மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 42,722 தொகை மற்றும் ரூபா 318,868 தொகை மிகை விதிப்புக்கள் செலுத்த நேரிட்டிருந்தது. | சட்டத்தின் பிரிவு களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிதி நெருக்கடி காரணமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் போலவே ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு தொகைகள் செலுத்த முடியாமல் இருந்தது. தற்போது நிலுவைத் தொகை மற்றும் மிகை விதிப்புத் தொகைகளை செலுத்த நடவடிக்கை எடுத்தேன். |

## (இ) எதிர்பாரா செலவு நிதியம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 20(3) பிரிவின் பிரகாரம் சபரகமுவ மாகாண எதிர்பாராச் செலவு நிதியத்துக்காக ஆளுனரினால் விதிகள் ஆக்கப்பட்டிருக்காதுடன், நிதியம் ஆரம்பிக்கப்பட்டு 28 வருடங்கள் கழிந்துள்ள போதிலும் எச்சந்தர்ப்பத்திலும் அந் நிதியத்தை பயன்படுத்தி இருக்கவில்லை. | மாகாண சபை சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், நிதியம் ஆக்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | நிதியத்துக்கான விதிக் தொடர்பான சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் கௌரவ ஆளுனரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு அவரின் கட்டளைகள் மற்றும் அங்கீகாரத்துடன் விதிகள் ஆக்கப்படும். அவசர பேரழிவுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களின் போது சமூக சேவை அமைச்சு மற்றும் சமூக சேவை நிதியத்தின் மூலம் மற்றும் கௌரவ ஆளுனரின் நலன்புரி நிகழ்சித் திட்டங்களுக்கான செலவு விடய ஏற்பாடுகளின் மூலம் செலவுகள் மேற்கொள்ளப் பட்டடிருந்தது. |

## (ஈ) சபரகமுவ மாகாண சமூகசேவை நிதியம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | தேவையினை இனங்காணாமல் சமூகசேவை நிதியத்தின் கீழ் செவிப்புலன் ஊனமுற்ற நபர்களுக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 5,840,000 பெறுமதியான 400 செவிப்புல உபகரணங்கள் களஞ்சியத்தில் கிடைத்திருந்த 2018 ஜூன் மாதம் 20 ஆந் திகதியன்றே சமூக சேவைத் திணைக்களத்திற்கு வழங்கப் பட்டிருந்ததென இருப்புப் பதிவேட்டில் பதிவுசெய்யப் பட்டிருந்த போதிலும் 2019 மே மாதம் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட இருப்பு பௌதீக பரிசோதனையின் பிரகாரம் ரூபா 411,700 தொகை பெறுமதியான அதிசக்தியுடைய 23 செவிப்புல உபகரணங்கள் அலுவலக களஞ்சியத்தில் மற்றும் ரூபா 1,147,500 பெறுமதியான சாதாரண சக்தி உடைய 85 செவிப்புல உபகரணங்களும் | மிகவும் வசதி யான சலுகை அடிப்படையில் நலன்பெறு வோருக்கு உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான விதத்தில் முறையான நடைமுறை ஒன்று தயாரிப்பதற்கும், உபகரணங்களை விரைவாக நலன் பெறுவோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செவிப்புல உபகரணங்கள் நலன்பெறுவோருக்கு வழங்வதற்கு முன்னர் ஒவ்வொரு நபர்களுக்கும் பொருந்தக் கூடிய விதமாக வெவ்வேறாக அச்சு ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. செவிப்புல உபகரணங்கள் வினியோகிக்கப்பட்ட பின்னர் தொடர்ந்தும் மீதியாக இருந்த சாதாரண செவிப்புல உபகரணங்கள் 85 உம் மற்றும் அதி சக்திவாய்ந்த உபகரணங்கள் 23 உம் அவற்றை வினியோகிக்கும் அலுவல்கள் 2019 ஏப்ரல் மாதம் கடைசிப் பகுதியில் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்ததுடன் அந்த நாட்களில் நாட்டில் ஏற்பட்ட சீரற்ற மோதல் சூழ்நிலை காரணமாக நிறைவேற்ற முடியாது இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கள் நிறுவனத்தில் காணப்பட்டது. | | |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதியத்தின் மீதி ரூபா 54,399,734 தொகை காணப்பட்ட போதிலும் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் எவ்வித உதவியும் பெற்றுக் கொள்ளாத துணையற்ற குடும்பங்களை இனங்கண்டு உதவி வழங்கும் நிகழ்சித் திட்டம் ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை. | நிதியத்தின் உரிய பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சமூக சேவை நிதியத்தின் நடைமுறைக் கணக்கின் காசுமீதி போதியளவாக காணப்படாமையால் சந்தர்ப்பங்களில் வட்டித் தொகையை நடைமுறைக் கணக்கிற்கு மாற்றி உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சமூக சேவை நிதியத்தின் நம்பிக்கை பொறுப்புச் சபை தலைவர் பதவியில் செயலாற்றும் புதிய செயலாளரின் தலைமை யின் கீழ் 2018.12.31 நம்பிக்கை பொறுப்புச் சபை கூடியதினால் 2019 ஆண்டில் அந்த விண்ணங் களுக்கான கொடுப்பனவு கள் மேற்கொள்ளப்பட்டது. |

**4.2 வாணிப முற்பணக் கணக்கு**

**உந்துகொட கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலைய வாணிப முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்திற்கு 2011 ஆம் ஆண்டில் இலவசமாக வழங்கியிருந்த கூட்டுக்கிரயம் ரூபா 5,638,278 தொகைக்கான கால்நடை உணவு தயாரிக்கும் இரண்டு இயந்திரங்கள் 2019 மே 21 அளவிலும் பயன்படுத்தப் படாமல் காணப்பட்டது. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தகுதியுள்ள நலன்பெறுபவர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிட்டு உள்ளோம். |

**5. செயற்பாட்டு மீளாய்வு**

**5.1 செயலாற்றல்**

**அரசாங்க மானியங்கள்**

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக கிடைத்திருந்த ஏற்பாடுகள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பாக விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | மூலவளங்கள் | அனுமிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | குறை பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| (அ) | மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் (PSDG) | 2630.84 | 1951.37 | - |
| (ஆ) | மாகாண அபிவிருத்தி மானியம் (PDG) | 688.84 | * | - |
| (இ) | நெறிமுறை அடிப்படை மானியம் (CBG) | 454 | 460.50 | - |
| (ஈ) | விஷேட துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (கல்வி) | 162.05 | 113.60 | 48.45 |
| (உ) | விஷேட துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (சுகாதாரம்) | 324.80 | 323.52 | 1.28 |
| | | 4260.53 | 2848.99 | 49.73 |

* மாகாண அபிவிருத்தி மானியங்கள் (PDG) தொடர்பான செலவுகள் (PSDG) மற்றும் (CBG) செலவுகளில் அடங்கியுள்ளன.

## 5.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முதல் அமைச்சின் சரண செவண வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் உடையவர்கள் அல்லாத மூன்று நபர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. | இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேறக் கூடிய விதமாக செயற்பட வேண்டும். | கூரை முற்றாக உக்கியிருந்த வீடொன்றிற்காக முதலாவது தவணைப் பணம் வழங்கப்பட்ட பின்னர் பிள்ளைகளின் வருமானத்தின் மூலம் வீடு திருத்தப்பட்டிருந்தது. எதுவித தொழிலும் செய்யாத ஐந்து அங்கத்தவர்களை கொண்ட அடுத்த வீட்டின் சாந்து பூசி வீட்டின் உள்நிலத்திற்கு சீமெந்து போட்டு ஜன்னல்கள் கதவுகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. ஒரு பகுதியில் பலகை மற்றும் ஒரு பகுதியில் களிமண் உடனான கூரைக்கு தகரங்கள் வேயப்பட்ட அடுத்த வீட்டிற்காக முதலாவது தவணை பணம் பரிந்துரைத்தேன். மீளாய்வு செய்த பின்னர் மீதியான தவணைப் பணங்களை செலுத்துவது தொடர்பாக தீர்மானிப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஐந்து மாகாண வைத்திய சாலைகள் மற்றும் மூன்று சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்களில் மருந்து வகைகளின் பௌதீக பரிசோதனை யின் போது கண்டறியப்பட்ட 48 வகையான மருந்து வகைகளை சேர்ந்த 22,572 மருந்து அலகுகளில் மிகைகள் மற்றும் 47 மருந்து வகைகளில் 683,244 அலகுகள் குறைவுகள் தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மருந்து இருப்புப் பதிவேடு சரியான முறையில் பேணப்பட வேண்டும். | வேறு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த மருந்து வகைகள் களஞ்சியத்தில் காணப்படல், வழங்கப்பட்ட மருந்து வகைகளை எடுத்துச் செல்ல முன்னர் புத்தகங்களில் இருந்து கழித்திருத்ததினால் மிகைகள் ஏற்பட்டிருந்தது. இந்த மிகை கணக்காய்வுத் திகதியின் பின்னர் ஒப்படைக்கப்பட்டன. புத்தகங்கள் சரியாக சமப்படுத்து வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டது. |
| (இ) | எம்பிலிபிடிய மற்றும் புஸ்ஸெல்ல ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மற்றும் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் பேணப்பட்டுவரும் உலர் மற்றும் முடிவுற்ற மருந்துகள் இருப்புப் புத்தகத்தின் பிரகாரம் மீதி மற்றும் பௌதீக இருப்பு மீதி இடையே காணப்படும் முறையே 08 மருந்து வகைகளில் 75 போத்தல்கள் மற்றும் 36.650 கிலோகிராம் மிகை ஒன்றும் மற்றும் 22 வகையான மருந்துகளில் 34 போத்தல்கள் மற்றும் 40.320 கிலோகிராம் குறைவுகளும் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மருந்து வகை களின் குறைவு மற்றும் மிகை தொடர்பாக கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எம்பிலியிடிய மற்றும் புஸ்ஸெல்ல ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மற்றும் மாகாண ஆயுர்வேத திணைக்களம் தொடர்பான 2018.12.31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அங்கு குறிப்பிடப்படும் குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக தேவையான தொடர்நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மூலம் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் 2007, 2009 மற்றும் 2010 ஆண்டுகளின் போது கிரிஎல்ல, அரணாயக மற்றும் கலவான பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியிருந்த கடன்தொகையில் ரூபா 3,223,436 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது. | கடன்களை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவணைப் பணத்தில் ரூபா 1,776,564 தொகை அறவிடப்பட்டி ருந்ததுடன் அறவிடப்பட வேண்டிய மீதித் தொகை ரூபா 3,223,436 ஆகும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (உ) | கரவனெல்ல தள வைத்திய சாலையில் வடிகாலமைப்பு முறைமையின் கழிவுநீர்த் தொட்டி திறந்திருந்த காரணத்தினால் மழை காலத்தில் நீர் வடிந்தோடி நீர் மூலங்களுடன் ஒன்றாக கலக்கப்படுவதனால் அந்த முறைமையை முறைப்படுத்து வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் அந்த வடிகாலமைப்பு முறைமைக் காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் ஒன்றும் பெற்றிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்று அந்த முறைமையை முறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக மீண்டும் குறிப்பிட்ட நிறுவனங்களை அறிவுறுத்தி புதிய முறைமை ஒன்றை நிர்மாணிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கின்றேன். |

**5.3 தோற்றக்கூடிய ஒழுங்கீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண வீதி அமைச்சின் ஏற்பாடுகளின் மீது கொலொன்ன பிரதேச சபையின் மேற்பார்வை யின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 21 விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்தி செயற்திட்டங்களில் கொடுப்பனவு செய்யப்பட்ட வேலை விடயம் மூலம் கண்டறியப்பட்டிருந்த அடுக்கப்பட்ட மண்ணை பரப்புதல் என்ற வேலை விடயம் மேலதிக வேலை விடயம் ஒன்றாக உட்படுத்தி 38,872 கனமீற்றர் மண்ணிற்காக கூட்டுத்தொகை ரூபா 5,928,010 தொகை மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டி உள்ளதுடன் நட்டங்களை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | EW1-003 ரேட்டின் பிரகாரம் அடுக்கப்பட்ட மண் விளையாட்டுத் திடலில் பரப்புவதற்கு மற்றும் நீர் ஊற்றி உருளை மூலமாக தகர்ப்பதற்காக மாவட்ட விலை நிர்ணயிக்கும் குழுவின் சேவைக்காக 2016 ஆம் ஆண்டிற்கான கூறுவிலைகள் உட்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்த பகுப்பாய்வு அறிக்கையின் படி 01 கனமீற்றர் மண்ணுக்காக ரூபா 483.08 தொகை செலவீடு ஆகும் என அறிவிக்கிறேன். EW1-002 மற்றும் EW1-003 ஆகிய இரண்டு விடயங்களுக்கும் ரூபா 439.70 செலவிடப்பட்டுள்ளது. இந்தத் தொகை மாவட்ட விலை நிர்ணயிக்கும் குழுவின் பகுப்பாய்வு அறிக்கையின் மூலம் தயாரிக்கப்பட்ட விலையை விட குறைவாக இருந்ததால் அரசாங்கத்துக்கு இதன் மூலம் நட்டம் ஒன்று ஏற்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண வீதி அமைச்சின் ஏற்பாடுகளின் மீது செயற்படுத்தப் பட்டிருந்த 08 விளையாட்டுத் திடல்கள் மற்றும் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களில் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதி தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 1,094,609 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | நிதி நட்டங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேடிப்பார்த்து பதில் அனுப்புவேன். |
| (இ) | ஓமல்பே பிராந்திய வைத்திய சாலையின் சிறுவர், குழந்தைகள் மற்றும் தாய்மார் பிணிஆய்வு கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பாக சிட்டையின் பிரகாரம் 03 வேலை விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 103,364 தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்தியிருந்த தொகையை அறவிடப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

**5.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண வீதி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் குருவிட பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்ட 2016 திசெம்பர் 31 திகதி இரத்துச் செய்யப்பட்டி ருந்த பரகடுவ வடப்பிடிய அருணலு வொலிபோல் விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக 2018 ஏப்ரல் 02 திகதி ரூபா 1,339,115 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேடிப்பார்த்து பதில் அனுப்புவேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பலங்கொட நிறைவேற்று பொறியியலாளர் பிரதேசத்தில் மீளாய்வாண்டின் போது மேற் கொள்ளப்பட்ட 42.7 கி.மீற்றருக்கு ஆன 10 பாதை பராமரிப்புகள் தொடர்பாக ரூபா 9,379,069 செலவுகளை உறுதிப்படுத்து வதற்காக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் சிட்டைகள் தொடர்பான கணியப் பத்திரத் திற்காக அளவை அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை. | போதியளவு மூலப்பதிவேடுகள் கொடுப்பனவு களை உறுதிப் படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேடிப்பார்த்து பதில் அனுப்புவேன். |
| (இ) | சபரகமுவ மாகாண அரச சேவையில் ஆரம்ப தொழில்நுட்பம் அல்லாத சேவை வரிசையை சேர்ந்த பதவிக்காக நியமன அதிகாரி மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு எனினும் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் அவ்வாறான 02 பதவிகளுக்காக அமைச்சுச் செயலாளரினால் 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி நியமனம் வழங்கப்பட்டதுடன் சேவையும் நிரந்தரப்படுத்தப்பட்டு அத்திகதி முதல் 2018 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 3,171,552 இற்கான சம்பளமும் செலுத்தப்பட்டுள்ளது, | நியமன அதிகாரியினால் ஆட்சேர்ப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இந்த இரண்டு நியமனங்கள் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் எம்பிலிபிடிய மகாவலி விளையாட்டுத் திடல் மற்றும் இரத்தினபுரி நவநகர விளையாட்டுத் திடலுக்கான தொழிலாளர் பதவி இரண்டே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு பதவிகளினதும் சரியான பதவிப் பெயர் Dept (திணைக்களத்திற்கான பதவிகள்) என்பதே. இதன் பிரகாரம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு, அங்கீகரிக்கப் பட்ட பதவியணியினை திருத்து வதற்காக அனுப்பியுள்ளேன். |

## 5.5 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பலங்கொட நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் மேற்பார்வை செய்யப்பட்ட பலங்கொட தள வைத்தியசாலை யில் ஐந்து மாடிக் கட்டிடத்தின் நிர்மாண வேலை தொடர்பாக பெற்றிருந்த அளவைகளுடன் கொடுப்பனவுச் சிட்டையை இணக்கம் செய்த போது 09 வேலை விடயங்களுக்காக ரூபா 3,651,276 தொகை மிகையாக செலுத்தப்பட்டுள்ளது. | மிகையாக செலுத்திய தொகையை அறவீடு செய்ய வேண்டும். | அனைத்து அளவைகளையும் மீண்டும் பெற்று முறைசார் விதமாக மீண்டும் அளவைகளை சரிசெய்து ஏதேனும் விடயத்திற்காக மிகையாக செலுத்தி இருந்தால் அதனை கழித்து இறுதி சிட்டையை திருத்துவேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ர/தெஹெனகந்த வித்தியாலயத் தின் பாதுகாப்புச் சுவர் நிர்மாணிக்கும் நிர்மாண வேலை 2016 செப்தெம்பர் 04 ஆந் திகதி பூர்த்தி செய்த பின்னர் ரூபா 900,242.17 தொகை செலுத்தப்பட் டிருந்த போதிலும் 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதி இரத்தினபுரி வலய கல்வி அலுவலகத்தின் தொழிநுட்ப அலுவலகருடன் அளவை எடுத்த போது ரூபா 202,145 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு மிகையாக செலுத்தியிருந்த பணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இடத்தின் தேவைக்கேற்ப சுவரின் அகலம் 02 அடி என்ற பகுதியை சுமார் 4'6'' என்ற உயரத்திற்கு மற்றும் 107 அடி நீளத்திற்கு சுவர் நிர்மாணிக்கப்பட்டது. தவறுதலின் காரணமாக அச் சந்தர்ப்பத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வேறு ஒரு சுவரின் அளவை சிட்டை உட்படுத்தப்பட்டிருந்தது. மேலதிக கொடுப்பனவு ஒன்று நேரிட்டிருக்க வில்லை. |
| (இ) | ர/எம்பி/பனாமுர மகா வித்தியாலய த்தின் விளையாட்டு அரங்கு அபிவிருத்தி செய்யும் ஒப்பந்த வேலையின் கருங்கற்கள் உடைத்து அகற்றுவதற்காக சபரகமுவ பிரதி பிரதான செயலாளர் (பொறியியலாளர் சேவை) அலுவலகத்தினால் வெளியிடபட்டுள்ள பாதைகளுக் கான அங்கீகரிக்கப்பட்ட விலைப் பட்டோலை – 2016 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிழையான ரேட் ஒன்றினை பயன்படுத்தி ரூபா 136,495 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு மிகையாக செலுத்தியிருந்த பணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | எம்பிலிபிடிய வலய அலுவலகத் திற்கு அறிவித்துள்ளேன். பதில் கிடைத்தவுடன் சமர்ப்பிக்கின்றேன். |
| (ஈ) | எஹலியகொட வட்டாரக் கல்வி அலுவலகத்தில் மேற்கொள்ளப் பட்ட திருத்த வேலையின் போது நிறைவேற்றப்படாத வேலைக்காக மற்றும் ர/சுமன சமன் வித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதியின் திருத்த வேலையின் போது 7 வேலை விடயங்களின் நிறைவேற் றப்படாத கருமங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 209,220 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | பரிசோதனை மேற்கொண்டு மிகையாகச் செலுத்திய தொகையை அறவீடு செய்ய வேண்டும். | இரத்தினபுரி வலயக் கல்வி அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பதில் கிடைத்ததும் சமர்ப்பிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கரவனெல்ல தள வைத்தியசாலை யின் ஐந்து மாடிக் கட்டித்தை 18 மாதங்களில் நிர்மாணிப்பதற்காக 2015 ஒக்தோபர் 16 திகதி ரூபா 105,573,027 இற்கான ஒப்பந்த வேலை உடன்படிக்கை ஒன்று அணுகியிருந்ததுடன், கட்டிடம் 2018 திசெம்பர் 31 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்போது நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை. தாமதம் தொடர்பாக பிரதான செயலாருக்கு அறிவித்துள்ளேன். |

**5.6 செயற்திட்டங்கள் செயற்படுத்துதல்**

**5.6.1 தாமதமாகிய செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் ரூபா 5,700,000 தொகை பெறுமதியான 3,000 சிறுவர்களுக்கான பெரிய கதிரைகள் கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. பண்டங்கள் ஒப்படைக்க வேண்டிய இறுதித் திகதி உடன்படிக்கையில் உட்படுத்தி இருக்காத போதிலும் பண்டங்களின் விவரக் குறிப்பு பதிவேட்டின் படி 2017 பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பண்டங்கள் ஒப்படைக்க வேண்டி இருந்தது. 27 வாரங்கள் தாமதித்த பின்னர் பண்டங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், கொடுப்பனவுகள் தாமதமாகியதினால் பண்டங்கள் வழங்குவதில் காணப்பட்ட தாமதத்திற்கான கட்டணம் ரூபா 1,083,000 தொகையினை அறவீடு செய்ய முடியாதிருந்தது. | உரிய அனைத்து நிபந்தனை களையும் உள்ளடக்கி உடன்படிக்கை முறைப்படி தயாரித்து அதன்படி செயற்பட வேண்டும். | வழங்குனரினால் கதிரைகள் வினியோகம் ர/எம்பி/எம்பிலிபிடிய கனிஷ்ட வித்தியாலயத்தில் 2017 ஜூலை 14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது என கருணையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வழங்குனருக்கு கொடுப்பனவு செய்வதற்காக போதியளவு கட்டுநிதி கிடைக்கப் பெறாமையால் 2018 ஜனவரி 25 திகதி கொடுப்பனவு மேற்கொள் ளப்பட்டது. கொடுப்பனவு தாமதம் ஆகியதால் வழங்குனரிடம் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்காக முடியாமல் போனது என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். |

### 5.6.2 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண வீதி அமைச்சினால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்காக திட்டமிடப் பட்டிருந்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 34,617,494 தொகைக்கான தரை அலங்காரம் மற்றும் பாதை அபிவிருத்தி 2 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூடியளவு திட்டங் களுக்கு அமைவாக செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | விலைகூறல் தாரர்களை தெரிவு செய்வதற்கு இயலாமை மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் மதிப்பீட்டு வேலை பெறுமதியை மிகைத்து விலைகூறல்கள் சமர்பித்திருத்தல் திணைக்களத்தின் வேலைப் பெறுமதிக்கு நிர்மாண வேலையை செயற்படுத்துவதற் காக இணங்காமை ஆகிய காரணங்களினால் இந்த செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப் படாமைக்கான காரணங்களாகும். |
| (ஆ) | காணி மற்றும் விவசாய அமைச்சு மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்காக திட்டமிட்டி ருந்த 2 நீர்ப்பாசன கால்வாய் அபிவிருத்தி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூடியவு வருடாந்த திட்டத்திற்கு அமைவாக செயற்பட வேண்டும். | எபலாவ ரம்புக்பத வயல் நிலப் பரப்பின் கால்வாய் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் விவசாயிகளின் விருப்பம் இன்மையால் ஏற்பட்டிருந்த சிக்கல் நிலைமையினால் இரத்துச் செய்யப்பட்டது.<br>பரபே நீர்ப்பாசன கால்வாய் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை நிறைவேற்று வதற்காக விவசாய அமைப்புக்கள் ஒன்றும் முன்வராமையால் இரத்துச் செய்யப்பட்டது. |

### 5.6.3 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண வீதி அமைச்சின் ஏற்பாடுகள் மீது எம்பிலிபிடிய பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்ட ரூபா 1,970,667 தொகை வேலை பெறுமதியைக் கொண்ட பனாமுர பரவிகந்த பாதையின் 223 மீற்றர் நீளம் கொங்கிரீட் பண்ணும் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 1½ வருடங்கள் கழிவதற்கு முன்னர் மொத்தப் பாதையின் கொங்கிரீடுக்காக பயன்படுத் தப்பட்ட ¾ அங்குல கற்கள் வெளியே வந்திருத்தல் | செயற்திட்டம் செயற்படுத்தப் படும் சந்தர்ப்பத்தில் முறையான மேற்பார்வை ஒன்று மேற் கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக உரிய ஒப்பந்தக்காரர் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டு நிர்மாண வேலையில் குறைபாடுகளை விரைவாக சரிசெய்யுமாறு ஆலோசனை வழங்கினேன். |

| | | | |
|---|---|---|---|
| | பாதையின் அத்திவாரம் நியமங்களுக்கு ஏற்ப நிறைவேற்றப்படாமை 43 மீற்றருக்கான பகுதி கொங்கிரீட் படை ஒன்று நீளப் பகுதியில் வெடிப்படைந்திருந்தது. | | |
| (ஆ) | சபரகமுவ மாகாண விதிகள் அமைச்சின் ஏற்பாடுகள் மீது ரூபா 11,776,565 இற்கான வேலைப் பெறுமதிக்காக குருவிட ஹல்பே கொரக கால்வாய் 0.00 கி.மீ. முதல் 8.40 கி.மீ. வரை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்ய வேண்டிய காலம் கடந்து 487 நாட்களுக்காக தாமதக் கட்டணம் ரூபா 588,828 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | செயற்திட்டத்தை செயற்படுத்தும் சந்தர்ப்பத்தில் உரிய மேற்பார்வை ஒன்று மேற் கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் நட்டத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண வேலை அலுவல்களின் முன்னேற்றம் 65 சதவீதமாகும். உடன்படிக்கை காலப் பகுதியில் வேலை பூர்த்தி செய்திருக்காததுடன் பல்வேறு காரணங்களின் காலநீடிப்பிற்கான விண்ணப்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வீதிகள் புனர்நிர்மானத்தின் கீழ் இந்த பாதையின் 03 பாலங்களை சிறிய திருத்த வேலைகள் மேற் கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 02கி.மீ. இடத்தில் அமைந்துள்ள பாலத்தில் கைப்பிடி பொருத்தப் பட்டிருந்தது. |
| (இ) | மாகாண வீதிகள் அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் பலங்கொடை நிறைவேற்று பொறியலாளர் அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் ஹுனுகொடுவ முதல் ரஜவக கொடகும்புற சந்தி வரையான பாதையை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையில் இரண்டாவது தடவை தார் பூசும் போது 520 சதுர மீற்றருக்காக ரூபா 57,980 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், இந்த திருத்த வேலைகள் மேற்கொள்ள ப்பட்டு 15 மாதங்கள் முடிவடைய முன்னர் 225 சதுர மீற்றர் அளவான தார் பகுதி உடைந்து பாதையின் மேற்பரப்பு தீவிரமாக சிதைவடைந்திருந்தது. | செயற்திட்டம் செயற்படுத்திய சந்தர்ப்பத்தில் முறையான மேற்பார்வை மேற்கொள்ளப் பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேடிப்பார்த்து பதில் அனுப்புகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காணி மற்றும் விவசாய அமைச்சின் ஏற்பாடுகளின் மீது எம்பிலிபிட்டிய நகர சபையின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த இலுகேவெல பாதையின் கொங்கிரீட் பரப்பும் நிர்மாண வேலை, வேலை பூர்த்தி செய்யப்பட்டு 14 மாதங்கள் கழிவதற்கு முன்னர் கொங்கிரீட் போடப்பட்ட பாதையில் 31 மீற்றர் பகுதியில் ¾ அங்குல கற்கள் வெளிப்பட்டிருந்தது. | செயற்திட்டம் செயற்படுத்திய சந்தர்ப்பத்தில் முறையான மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப் பட வேண்டும். | இது தொடர்பாக எம்பிலிபிடிய நகர சபையை விசாரணை மேற்கொண்ட போது ரம்புக்கனகம எகமுது விவசாய அமைப்பிற்கு அறிவித்த பின்னர் கொங்கிரீட் போடப்பட்ட பாதையின் மேற்பகுதி மீண்டும் கொங்கிரீட் போடப்பட்டு தயாரிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது. எவ்வாறாயினும் அதன் பொருத்தத் தன்மை தொடர்பாக சிக்கல் தன்மை ஒன்றின் காரணமாக அது தொடர்பாக உரிய தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை ஒன்று மற்றும் அதன் தற்போதைய நிலைமையினை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| (உ) | விவசாயத் திணைக்களத்தினால் 2017 ஜூன் 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட ரூபா 35,899,000 மதிப்பீட்டுக் கிரயத்தை உடைய கறபின்சா விவசாய பயிற்சி நிலைய உத்தேசித்த விடுதிக் கட்டிடத்தின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 74,319,000 தொகையை உடைய கட்டம் 2 இன் நிர்மாண வேலை ஒப்பந்தக்காரர்கள் உரிய முறையில் நிர்மாண வேலைகள் மேற்கொண்டிருக்காமையால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது. இதன் முதலாம் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பகுதியும் இது வரை பயன்படுத்தப் படாது காணப்படுகின்றது. | மதிப்பீட்டுக் கிரயத்தை மிகைக்காத வகையில் விரைவாக மீதி வேலையை பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி வடிவமைப்பு இயந்திர உபகரண அதிகார சபையினால் 2018 திசெம்பர் 24 ஆந் திகதி வரை இந்த நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படாமையினால் இதனை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. திறந்த கேள்வி நடைமுறையின் கீழ் ஒப்பந்தக்காரர் ஒருவரை மீண்டும் தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்து. |

## 5.6.4 போதியளவு நிறைவேற்றப்பட்டிருக்காத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குருவிட ஹல்பே சமகி மாவத்தைக்கு குடிநீர் வழங்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 250,000 தொகை செலவிடப்பட்டு பொருத்தப்பட்டிருந்த நீர் மோட்டரை இயக்குவதற்காக தேவையான மின்சார கொள்திறன் அப்பகுதியில் காணப்படாமையால் செயற்திட்டத்தை | எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேறும் விதத்தில் செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். | நிர்மாண வேலை ஊர் மக்களின் தேவை ஒன்றாக காணப்பட்டமை யால் இதனை செயற்படுத்துதல் கட்டாயமாக செய்ய வேண்டி உள்ளது. இதற்காக தற்போது பொதுக் கிணறுக்கு அண்மையில் இந்த ட்ரான்ஸ்போமரை பொறுத்து வதற்காக நடவடிக்கை எடுக்கும் |

| | | |
|---|---|---|
| செயற்படுத்த முடியாது இருந்தது. | | படி மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டது. |

## 5.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 5.7.1 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய ரூபா 550,000 தொகை கிரயத்தை உடைய சியம்பலாபிடிய கைத்தரி நிறுவனத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் 2007 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | நிறுவனத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் பயன்தரக் கூடிய கருமங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | இது மாவனெல்ல பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள கட்டிடம் ஒன்றாகும். இந்த நிறுவனம் 2007 ஆண்டின் போது பெண் தொழிநுட்பவியலாளர்கள் வராமையினால் மூடுவதற்கு நேரிட்டது. இந்த கட்டிடத்தின் உரிமை தொடர்பான சரியான தகவல் கண்டுகொள்ள முடியாத காரணத்தினால் மாவனெல்ல பிரதேச செயலகம் இதனை ஏற்றுக்கொள்ள இணங்கியிருக்க வில்லை. |
| (ஆ) | பலாங்கொட நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தை சேர்ந்த அசையும் நொருக்கு இயந்திரத்தை திருத்தம் மேற்கொள்ளாமையால் 05 வருடங்களுக்கு மேலாக எம்பிலிபிடிய நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான அசையும் நொருக்கு 2016 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்தம் மேற் கொள்ளப்பட்டு பயன்படுத்து வதற்கு அல்லது அப்புறப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எம்பிலிபிடிய நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான ZR 80 அசையும் நொருக்கு இயந்திரம் மிகவும் பழமைவாய்ந்த பயன்படுத்த முடியாத இயந்திரம் ஆததால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்து அப்புறப்படுத்துவதற்கு அல்லது வேறு வழிஒன்றின் மூலம் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | றம்புக்கன மாவட்ட வைத்திய சாலைக்கு 2014 ஒப்தோபர் 23 திகதி வேறொரு வைத்திய சாலையில் பயன்படுத்திய துணைக் கருவிகள் உடனான எக்ஸ் கதிர் இயந்திரம் ஒன்றினை வழங்கி இருந்த போதிலும் அந்த இயந்திரத்தை பொருத்துவதற்கு கட்டிடம் ஒன்று மற்றும் ஒளிக்கதிர் சுற்றெறிவு தொழிநுட்பவியலாளர் இன்மையால் 2018 ஒக்தோபர் 25 திகதி வரை செயற்படாது காணப்பட்டது. | செயற்படாத சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு செயற்பட வேண்டும். | மிகவும் பழமைவாய்ந்த இந்த இயந்திரத்தை திருத்துவதற்காக துணைக் கருவிகள் இன்மையும் அதற்காக பாரிய கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிடுவதால் பரிசோதனை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் படி இரத்தினபுரி உயிரியல் வைத்திய அலகுக்கு அறிவிக்கப்பட்டது. இயந்திரம் திருத்தக் கூடிய நிலைமையில் காணப்படுகின்றதா என முகவராண்மையினால் பரிசோதனை மேற்கொண்டு அறிவித்த பின்னர் அது தொடர்பான நடவடிக்கை எடுக்க முடியும் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பலங்கொட, கலவான, கஹவத்த, எஹலியகொட, எம்பிலிபிடிய வைத்தியசாலைகளில் 6 வகை யான இயந்திரங்களின் 10 அலகுகள் பல்வேறு காரணங்களினால் 4 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரையான காலம் செயற்படுத்தப்படாமல் காணப்பட்டது. இந்த அலகுகளின் பெறுமதி மொத்தமாக ரூபா 37,670,000 ஆகக் காணப்பட்டது. | வைத்தியசாலை களில் உள்ள அனைத்துச் சொத்துக்களும் உச்ச வினைதிறனுடன் பயன்படுத்து வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல் x கதிர் இயந்திரத்தை எதிர்காலத்தில் பயன்படுத்து வதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. Auto clave இயந்திரத்தை பொறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், எம்பிலிபிடிய வைத்தியசாலையின் மருத்துவ உபகரணங்களை செயற்படுத்து வதற்கு தொழிநுட்ப அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவர் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டது. பலங்கொடை வைத்தியசாலையின் மின்பிறப்பாக்கி பொருத்து வதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | சுமார் 13 வருட காலம் முதல் பயன்படுத்தப்படாது காணப்பட்ட புஸ்ஸெல்ல ஆயுர்வேத வைத்தியசாலையின் இரண்டு அரைக்கும் இயந்திரங்கள் கலவை செய்யும் தொட்டி மற்றும் மின்சார பொயிலர் என்பவற்றை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை அல்லது மாற்று நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பயன்படுத்த முடியாதவை என இனங் கண்டுள்ள சொத்துக்களை அப்புறப்படுத்தல் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | இந்த உபகரணங்கள் பயன்படுத்தக்கூடிய நிலைமையில் காணப்படாமையால் இந்த உபகரணங்களை ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்காக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை ஒன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி நிறைவேற்றுப் பணிப்பாளர், அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண அதிகார சபைக்கு விண்ணப்பித்துள்ளேன். அந்த அறிக்கை கிடைத்த பின்னர் முதலமைச்சின் ஆலோசனையுடன் இது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பேன். |

### 5.7.2 வெளித் தரப்பினரால் தனதாக்கிய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் பாதை ஒன்று கஹவத்த தள வைத்தியசாலை உட்பகுதியில் அமைந்துள்ள மையால் அதற்கு அண்மையில் அமைந்துள்ள வைத்தியசாலையின் ஆய்வுகூடக் கட்டிடம் மற்றும் சிறுவர் வாட்டு என்பவற்றின் பாதுகாப்பு தொடர்பாக சிக்கல் தன்மை ஒன்று காணப்பட்டது. அதே போல் வைத்தியசாலைக்கு சொந்தமான காணியின் பகுதி ஒன்று வெளித்தரப்பினரால் தனதாக்கிக் கொண்டிருந்த போதிலும் அந்த ஆதனங்களை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைத்தியசாலை காணியை தீர்த்து போதியளவு பாதுகாப்பு ஒன்று வைத்தியசாலை கட்டிடங்களுக் காக வழங்க வேண்டும். | வைத்தியசாலைக்கு சொந்தமான காணியை தீர்ப்பதற்காக நிலஅளவை ஒருவரின் சேவையை பெற்று பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |
| (ஆ) | புஸ்ஸெல்ல ஆயுர்வேத வைத்தியசாலை வளவில் பிரதான பாதைக்கு முகம் கொடுக்கக் கூடிய விதமாக அங்கீகாரமற்ற நிர்மாண வேலை ஒன்று மேற்கொண்டிருந்ததுடன், காணியின் வேலி எல்லை தயாரித்து காணி உறுதி அல்லது வேறு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொண்டு காணியின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைத்தியசாலை யின் ஆதனங்களை சரியாக இனங்கண்டு ஆவணப்படுத்த வேண்டும். | வீதி அபிவிருத்தி அதிகார சபையை அறிவுறுத்தி அந்த கட்டிடத்தை அகற்றுவதற்கு அலுவல்கள் மேற்கொள்ளும் படி விண்ணப்பித்திருந்ததுடன், இந்தக் காணி எதிர்காலத்தில் அளவை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்துக்கொள்கிறேன். |

### 5.7.3 பதவியணி நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபரகமு மாகாண ஆயுள்வேத திணைக்களத்தில் 77 உத்தியோக த்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதே போல் மருத்துவ ஆய்வு கூடம் தொழிநுட்பவியலாளர் இன்மையால் இரத்தினபுரி வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வு கூடம் 2015 முதல் மூடப்பட்டிருந்தது. | வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக பொருத்தமான உத்தியோகத்தர் களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை இந்த திணைக்களத்திற்கு பெற்றுத் தருமாறு நீண்ட காலமாக மத்திய அரசிடம் விண்ணப்பித்துள்ளேன். |

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ர/கஹவத்த ஆரம்ப வித்தியாலய அதிபரின் பணமோசடி தொடர்பாக கணக்காய்வுப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் உடனடியாக கடமையை இடைநிறுத்தி ஆரம்ப விசாரணை மேற்கொள்ளல் அல்லது குற்றப்பத்திரம் வழங்குமாறு பிரதான செயலாளரின் 2018 ஆகஸ்ட் 04 திகதிய கடிதத்தின் பிரகாரம் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டி ருந்த போதிலும் இது வரை செயற்படுத்தியிருக்கவில்லை. | பிரதான செயலாளரின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும். | கேளரவ ஆளுனரின் கட்டளை மற்றும் ஆரம்ப விசாரணைக் குழுவின் துணைப் பரிந்துரை மீது ர/கஹவத்த ஆரம்ப பாடசாலையின் அதிபரை ர/குருவிட மத்திய மஹா வித்தியால யத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. |

### 6.2 சுற்றாடல் சார் மற்றும் சமூக பொறுப்புக்கள் நிறைவேற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கிரிஎல்ல சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தின் மக்கள் சுகாதாரப் பரிசோதகரின் மாதாந்த அறிக்கைகளின் பிரகாரம் 2018 ஒக்தோபர் மாதம் அளவில் பாதுகாப்பற்ற கிணறுகளை பயன் படுத்தும் 1972 எண்ணிக்கையான வீடுகள் மற்றும் உடலாரோக்கிய கழிப்பறை இன்றிய 07 வீடுகள் காணப்பட்டன. | குறைந்த வருமானம் உடையோருக்கு போதியளவு உடலாரோக்கிய வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கழிவறைகள் நிர்மாணிப்பதற்கும் கிணறுகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கும் அடிக்கடி ஆலோசனை வழங்கப்பட்டது. |
| (ஆ) | 03 மக்கள் சுகாதார பரிசோதகர் வட்டாரங்களின் மாதாந்த அறிக்கைகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது பாதுகாப்பற்ற கிணறுகள் பயன் படுத்தும் வீடுகள் எண்ணிக்கை 2336, கழிவறை இன்றிய வீடுகள் 62, உடலாரோக்கியம் அற்ற கழிவறைகளைப் பயன்படுத்தும் 48 வீடுகள் காணப்பட்டன. | குறைந்த வருமானம் உடையோருக்கு போதியளவு உடலாரோக்கிய வசதிகள் வழங்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கழிவறைகள் இன்றிய வீடுகளுக்கு கழிவறைகள் நிர்மாணிப்பதற்காக உதவி வழங்கும் திட்டம் ஒன்றும் இது வரை மேற்கொள்ளவில்லை. கிணறுகளை பராமரிப்பதற்கான நடவடிக்கை உரிய செயல்முறை ஒன்று காணப்படவில்லை. சுத்தமான குழாய்க் குடிநீர் வழங்குதல் மேற்கொள்ளாமையால் பாதுகாப்பற்ற கிணறுகளை பயன்படுத்தல் அதிகரித்திருந்தது. |

## 6.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபரகமுவ மாகாண சபையின் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2018 மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 2,746 மில்லியன் தொகை நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்று தற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ஒரு குறிக்கோளாவது சீரற்ற காலநிலை மற்றும் அதன் தாக்கங்களுக்கு எதிராக விரைவாக செயற்படுத்துதல் தொடர்பான குறிக்கோள்கள் மாகாண சபையினால் இனங்கண்டிருக்காத துடன், இனங்கண்டிருந்த 16 குறிக்கோள்களில் முக்கியமான இலக்குகள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்காக உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு முதல் சரியாக திட்டங்களை செயற்படுத்துவேன். |